# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 40/6—1973 ජනවාරි 3 වැනි බදාදා—1973.01.03

40/6 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு சனவரி மாதம் 3 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### பதியப்பட்ட பங்குத் தொகுதி, பிணைகள் கட்டளைச்சட்டம்

(420 ம் அத்தியாயமான) பதியப்பட்ட பங்குத்தொகுதி, பிணைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பண்பால் நிதி அமைச்சர் நாணயக்காரபதிராகே மாட்டின் பெரேரா ஆகிய நான் 1972 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தினாற் கடனைப் பெறுதற்கு வேண்டிய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள தொகையாகிய நூற்று அறுபத்தைந்து கோடி ரூபாவில் இதற்கான அட்டவணையிற் குறிக்கப்பட்டுள்ள தொகை, அட்டவணையிற் குறிப்பிடப்பட்டுள்ள விதமாகவும் அதிற் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்கேற்பவும் இலங்கையிற் கடனைப் பெறுதல் வேண்டுமென இக்கட்டளையினாற் பணிக்கின்றேன்.

கொழும்பு,
3 சனவரி, 1973.

என். எம். பெரேரா,
நிதியமைச்சர்.

#### அட்டவணை

1. பெறப்படவேண்டிய கடன் தொகை எட்டுக் கோடி ரூபாவாகவும் சமநிலையில் வழங்கப்படும் 10–12 ஆண்டுக் கடனாகவும் அமைதல் வேண்டும்.

2. குறிப்பிடப்பட்ட கடனானது பதியப்பட்ட பங்குத்தொகுதியை ஆக்கி, வழங்குதலினால் மாத்திரம் பெறப்படல் வேண்டும்.

3. கடன் மீது வழங்கப்படும் வட்டியின் வீதம் ஆண்டொன்றுக்கு 9 சதவீதமாகவே இருத்தல் வேண்டும்.

4. ஒவ்வோர் ஆண்டிலும் சனவரி மாதத்தின் முதலாம் நாளும், யூலை மாதத்தின் முதலாம் நாளும் கடன்மீதான அரையாண்டு வட்டி வழங்கப்படவேண்டிய திகதிகளாக இருத்தல் வேண்டும்.

5. கடனை மீட்கும் நோக்கத்தோடு நிறுவப்படவிருக்கும் ஆழ் நிதிக்கு உதவு தொகையாக இலங்கையில் திரட்டு நிதியிலிருந்து ஆண்டொன்றுக்கு 5 சதவீதப்படி, ஓர் அரையாண்டு ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய உதவுதொகை 1974 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் நாளிலே தொடக்கப்படுதல் வேண்டும்.

6. கடன் பெறும் நோக்கத்திற்காக வழங்கப்படும் பதியப்பட்ட பங்குத்தொகுதிகளை மீட்டற்கான திகதி 1985 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் நாளாகும்.

ஆயின் 1982 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் முப்பத்தோராம் திகதிக்குப் பின்னராகவும், நிதியமைச்சர் நிச்சயிக்கும் திகதிக்கு ஆறு மாதங்கள் முன்னர் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படும் அறிவித்தலின் மூலம் அன்னாரால் நியமிக்கப்படக்கூடிய ஒரு திகதியாகவுமுள்ள அத்தகைய ஒரு பிந்திய திகதியில் எவையேனும் பங்குத்தொகுதிகளைச் சமநிலையில் மீட்பதற்கு அரசாங்கத்திற்கு விருப்புரிமையிருத்தல் வேண்டும்.

#### தகவற்றொகுப்பறிக்கை

1973 சனவரி 4 ஆந் திகதியன்று இப்பட்டியல் திறக்கப்பட்டு கடன் முழுவதும் பெறப்படும் போது மூடப்படும்

## ரூ. 8,00,00,000 கொண்ட ஒரு 10–12 ஆண்டுக் கடனின் வெளியீடு

### இலங்கை அரசாங்க 9 சதவீத வட்டிக் கடன், 1983–85

முகப்பு மதிப்பின்படி வழங்கப்பட்டது—முகப்பு மதிப்பின்படி திருப்பிக் கொடுபடவேண்டியது

பொதுப்படுகடன் பதிவாளர், இலங்கை அரசாங்கத்தின் சார்பாக 9 சதவீத வட்டியுடன கூடியதான 8,00,00,000 ரூபாய்களைக் கொண்ட ஒரு கடனுக்காக விண்ணப்பங்கள் கோருகின்றார். இக்கடன் 1985 சனவரி 1 ஆந் திகதியில் முகப்பு மதிப்பின்படி திருப்பிக் கொடுபடக்கூடியதாயிருக்கும். எனினும், இலங்கை அரசாங்கமானது விரும்பின், 6 மாத கால முன்னறிவித்தலில் 1982 திசெம்பர் 31 இற்குப் பிற்பாடு, எந்நாளிலும் இக்கடனைத் திருப்பிக் கொடுக்க விருப்புரிமை கொண்டதாயிருக்கும்.

**அதிகாரம்.**—1972 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க கடன்கள் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் அதிகாரத்திலும் (420 ஆம் அத்தியாயமான) பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதிகள் பிணைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கவும் இக்கடன் திரட்டப்படுகிறது.

**நோக்கம்.**—இலங்கை அரசாங்கத்தின் 1973 நிதி ஆண்டுக்குரிய காலப் பகுதிக்காய சேவையினது செலவைச் சமாளிப்பதற்காக 1972 ம் ஆண்டின் 18 ஆம் இலக்க கடன்கள் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2 (ஆ) என்னும் பிரிவின் கீழ் இக்கடன் திரட்டப்படுகின்றது.

**வெளியீட்டு வடிவம்.**—பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதிகளாக இக்கடன் வழங்கப்படும். (பதிவுசெய்த பங்குத் தொகுதிக்கேற்புடையன வான பொது நிபந்தனைகளைக் கொண்டுள்ள துண்டுத் தாள்களை இலங்கை மத்திய வங்கிக் கட்டடத்திலுள்ள பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்).

**வழங்கும் விலை.**—வெளியீட்டு விலை ரூ. 100 சதவீதம் விண்ணப்பக் காலத்தின்போது முழுமையாகக் கொடுக்கப்பட வேண்டும். ஆகக் குறைந்த உடைமை ரூ. 100 ஆகும்.

**விண்ணப்பங்கள்.**—1973 சனவரி 3 ஆந் திகதி முதல் பட்டியல் மூடப்படும் வரை பொதுப்படுகடன் பதிவாளரால் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பங்கள் அதற்கான படிவத்தில் எழுதப்பட்டு முழு அனுப்பு தொகையுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும். தேசிய சேமிப்பு வங்கியினது வைப்பாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை இந்நிலையத்தினூடாக அனுப்பி வைக்கலாம்.

வங்கியாளர்களுக்கும் (தேசிய சேமிப்பு வங்கி உட்படும்), அங்கீகாரம் பெற்ற பங்குத் தொகுதித் தரகர்களுக்கும், ஏனைய தரகர்களுக்கும், அவர்கள் முத்திரை தாங்கிய விண்ணப்பங்கள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உதவுதொகையினது பெயரளவுத் தொகை மீது 1/16 சதவீத தரகு வழங்கப்படும். ஏற்றுக்கொள்ளப்பட்ட உதவுதொகையின் மீது இதே சதவீதத்தைக் கொண்ட ஒரு பேரப் பேச்சுக்கூலி வழக்கறிஞர்க்கு அவர்களின் முத்திரை தாங்கப்பெற்ற விண்ணப்பங்கள் தொடர்பாக வழங்கப்படும்.

**காசோலை மூலம் கொடுப்பனவு.**—இலங்கை மத்திய வங்கியின் பேரில் எழுதப்பெற்று "இலங்கை அரசாங்கக் கடன் கணக்கில்" என்று குறுக்கே கோடிடப்பெற்ற காசோலை மூலம் கொடுப்பனவு செய்யப்படலாம்.

**பங்குத் தொகுதிச் சான்றிதழ்**—விண்ணப்பங்கள் பெறப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட பின் பங்குத் தொகுதிச் சான்றிதழ் வழங்கப்படும்.

**வட்டி.**—ஒவ்வோர் ஆண்டிலும் அரையாண்டிற்கொரு முறையாக சனவரி மாதம் 1 ஆம் நாளிலும் யூலை மாதம் 1 ம் நாளிலும் ஆண்டொன்றுக்கு 9 சதவீதம் வட்டி கொடுபடும். முதலாவது வட்டி 1973 யூலை 1 ஆம் நாளில் கொடுபடும். இவ்வட்டி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் தொடக்கம் 1973 யூன் 30 ஆம் நாளையும் உள்ளடக்கிய காலப் பகுதிகளுக்கு உரியதாகும்.

**வரிவிதிப்பு.**—(i) முத்திரைத் தீர்வை—கடன் வழங்கல், மாற்றல் அல்லது மீட்பு ஆகியவற்றிற்குப் பயன்படுத்தப்படும் ஆவணங்கள் அனைத்தும் முத்திரைத் தீர்வையினின்று விலக்களிக்கப்படும்.

**(ii) வருமான வரி.**—பாகப்பிரிவினையுறுத இந்துக் குடும்பங்களின் உறுப்பினர்கள் தவிர்ந்த, ஏனைய இலங்கையில் வசிக்கும் பங்குத் தொகுதி யுடையோர்க்கான வட்டி, வருமானவரிக் கழிப்பெதுவுமின்றி வழங்கப்படும். எனினும், வருமான வரி செலுத்தக் கடப்பாடுடையவரான இலங்கையில் வசிக்கும் பங்குத் தொகுதியுடையோர்கள், அத்தகைய வட்டியைத் தமது வருமானவரித் திரட்டில் குறிப்பிடல் வேண்டும். இலங்கையில் வசிக்காத வர்களும் பாகப்பிரிவினையுறுத இந்துக் குடும்பங்களின் உறுப்பினர்களுமானவர்களுக்குக் கொடுபட வேண்டிய வட்டி விடயத்தில் வரி, வருவாய்க் களனியிலேயே கழிக்கப்படுதல் வேண்டும். இலங்கை வருமான வரியிலிருந்து விலக்கப்பெற்ற ஆட்கள், அவர்களிடமிருந்து கழிக்கப்பெற்ற வரியை திரும்பத் தரும்படி கோர உரிமையுடையவர்களாவர்.

**(iii) சொத்து வரி.**—அரசாங்கமானது இலங்கையிலே வழங்கப்படும் இலங்கை அரசாங்கப் பங்குத் தொகுதிகளைச் சொத்துவரிக் கொடுப்பனவின் பேரில் ஏற்றுக்கொள்கிறது. இப்பங்குத் தொகுதியானது அதன் முகப்பு மதிப்பின் மொத்தப் பெறுமானமும் அதன் வட்டியும் சேர்ந்த தொகைக்குச் சமமான சொத்து வரித் தொகையொன்றினை அது சமன் செய்யும். சொத்துவரிக் கொடுப்பனவுக்கான பணத்திற்குப் பதிலாக பங்குத் தொகுதியினை ஏற்றுக்கொள்வது, பின்வரும் இரண்டிலும் ஒன்றை நிபந்தனையாகக் கொண்டுள்ளது :

(அ) முதலில் வழங்கப்பட்டபோது இறந்தவரால் உதவுதொகையாகக் கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும், அல்லது

(ஆ) இறந்தவரால், அவர் இறந்த திகதிக்கு ஓராண்டிற்கு முன்னரே கொள்வனவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிணை.**—இக்கடனுக்கு இலங்கைத் திரட்டு நிதி பிணையாக அமைந்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினது முகாமையின் கீழ், கடனை மீட்கும் நோக்கத்திற்கெனத் தனியே ஒரு கடனுழ்நிதி நிறுவப்படும். இச்சபையே கடனுழ்நிதிகளின் நம்பிக்கைப் பொறுப்பாயிருக்கும். ஆண்டொன்றுக்கு 5 சதவீதம் அரையாண்டிற்கொருமுறை இக்கடனுழ் நிதிக்கு உதவுதொகை உதவுதல் 1974 சனவரி 1 ஆம் திகதியிலிருந்து தொடங்கப்பெறும்.

**பொதுப்படுகடன்.**—இலங்கையின் தற்போதைய நிதியிடப்பட்ட மொத்தப் பொதுப்படுகடன் ரூபா 963,88,53,368 ஆகும். ஒன்று சேர்ந்த கடனுழ் நிதிகளின் அண்ணளவான சந்தைப் பெறுமானம் ரூபா 80,79,46,565 ஆகும். ஆகவே, நிதியாக்கப்பட்ட தேறிய பொதுப்படுகடன் ரூபா 883,09,06,803 ஆகும்.

**விண்ணப்பப் படிவங்கள்.**—விண்ணப்பப் படிவங்களைப் பொதுப்படுகடன் திணைக்களத்தில் அல்லது ஏதேனும் வர்த்தக வங்கி, கச்சேரி, அஞ்சலலுவலகத்தில் அல்லது தேசிய சேமிப்பு இயக்க ஆணையாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுப்படுகடன் **பதிவாளர்.**

பொதுப்படுகடன் திணைக்களம்,
மத்திய வங்கிக் கட்டடம், அ. பெ. 1149,
கொழும்பு, 1973 சனவரி 3.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது